[1st September 1959

Sri K. VINAYAKAM: Are the Government aware that in South Madras, viz., Kodambakkam, there is a place set apart for locating an infectious diseases hospital, a land owned by military authorities who have given it back to the State Government for this purpose?

The Hon. Sri M. A. MANICKAVELU: தென் சென்னையில் கோட்டூர் என்று ஒரு கிராமம் இருக்கிறது. இதை அங்கு வைக்கலாம் என்று ஏற்பாடு செய்திருந்தது. ஆனுல் அது கைவிடப்பட்டுவிட்டது. எங்கே ஆரம்பிப்பதாக இருந்தாலும் அங்கே குடியிருப்பவர்கள் ஆட்சேபனை செய்கிருர்கள்.

Sri P. G. MANICKAM: சபாநாயகர் அவர்களே, இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 35 தொத்து நோய் ஆஸ்பத்திரிகள் கட்டப்படும் என்று ஊட்டியில் நடந்த சுகாதார போர்டு கூட்டத்தில் டைரெக்டர் அவர்கள் தெரிவித்தார்கள். அதன்படி இதுவரை எத்தனை ஆஸ்பத்திரிகள் கட்டப்பட்டிருக்கின்றன ? இன்னும் எங்கெங்கு கட்டுவதாக உத்தேசம்?

The Hon. Sri M. A. MANICKAVELU: இதெல்லாம் கட்டுகிற பொருப்பு ஸ்தல-ஸ்தாபனத்தினுடையது. இவைகளைக் கட்ட அவர்கள் முன் வந்தால் அரசாங்கம் பாதிப் பணம் கொடுக்கும். அதற்காகும் செலவுக்குக் கூடுமான தொகை கொடுக்க திட்டம் இருக்கிறது. அதற்கு ஸ்தல-ஸ்தாபனம் முன் வரவேண்டும்.

Lignite Corporation, Neyveli

* 36 *Q.*—Sri S. LAZAR: Will the Hon. the Minister for Industries be pleased to state whether there is a proposal by the Government to induce the Lignite Corporation at Neyveli to have one or two buses with guides to take the visitors round on payment of fare?

The Hon. Sri R. VENKATARAMAN: No, Sir. There is no such proposal under the consideration of the Government. However it is understood that the Neyveli Lignite Corporation has under consideration a proposal to show round the visitors in the transport provided by the Corporation. There are already three information guides to take visitors round the Project.

Rayon

* 44 *Q.*—Sri P. G. MANICKAM: கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) தேசீய தொழிலபிவிருத்திக் கார்ப்பொரேஷன் மூலமாக வெங்காயச் சருகு சேலை தொழிற்சாலை (ரேயான் துணி உற்பத்தித் தொழிற்சாலை) ஒன்றை சென்னை ராஜ்யத்தில் அமைப்பது பற்றி அரசாங்கத்தாரால் பரிசீலனை ஏதாவது நடத்தப்பட்டு வருகிறதா ?

(ஆ) அவ்வாறு பரிசீலனை நடத்தப்பட்டுவரின், அதன் விவரங்கள் யாவை ?

The Hon. Sri R. VENKATARAMAN: (*a*) No, Sir.

(*b*) Does not arise.

* 45 *Q.*—Sri P. G. MANICKAM: கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) சென்னை ராஜ்யத்தில் நார்ப்பட்டு உற்பத்தி நிலையம் ஒன்றை ஏற்படுத்துவது பற்றி அரசாங்கத்தாரால் பரிசீலனை நடத்தப்பட்டு வருகிறதா ?

1st September 1959]

(ஆ) அவ்வாறு பரிசீலனை நடத்தப்பட்டுவரின், எந்த இடத்தில் இந் நிலையம் எப்போது ஏற்படுத்தப்படும் ?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) & (*b*) The Government have no proposals under their consideration for setting up a factory for the manufacture of rayon silk. But a firm in the private sector under the name and style South India Viscose, Limited has been started for the establishment of a factory near Mettupalayam for the manufacture of Viscose filament rayon yarns, staple fibre and auxiliary chemical products. The factory is expected to go into production in 1960.

SRI P. G. MANICKAM : ஸார், இந்தத் தொழிற்சாலையை இந்தியாவில் எந்த இடத்தில் அமைக்கலாம் என்பதைப் பற்றி ஆராய்ந்து அறிய மத்திய சர்க்காரால் நியமிக்கப்பட்ட ஜப்பானிய கோஷ்டி சென்னை ராஜ்யத்திற்கு விஜயம் செய்தபோது நமது சர்க்காரால் அவர்களிடம் என்ன தெரிவிக்கப்பட்டது ? வெங்காயச் சருகு சேலை உற்பத்தி செய்வதற்கு வேண்டிய சாதனங்கள், மூங்கில்கள் அதிகமாக நம்முடைய ராஜ்யத்தில் இருப்பதால் அந்தத் தொழிற்சாலையை நம்முடைய ராஜ்யத்தில் ஆரம்பிப்பது பற்றி மீண்டும் புனராலோசனை செய்து இந்திய சர்க்காருக்குத் தெரிவிக்கப்படுமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : கனம் சபாநாயகர் அவர்களே கனம் அங்கத்தினர் சொல்லுகிறபடி இருந்தால் நான் ரொம்பவும் சந்தோஷப்படுவேன். இந்த ராஜ்யத்தில் போதுமான மூங்கில் இல்லையென்று நாம் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறோம். கனம் அங்கத்தினர் அவர்கள் ஏராளமான மூங்கில் இருக்கிறதென்று சொல்லுகிறார்கள். இரண்டாவதாக, ஜப்பானிய குழு "ரேயான் பாக்டரி"யை எந்த இடத்தில் வைப்பது என்பதற்கான சாத்தியக் கூறுகளை அறியவே வந்தார்கள்.

SRI K. R NALLASIVAM : வெங்காயச் சருகு சேலைகள் வகையராக்கள் பால்க்கவர்ச்சியை அதிகமாக உண்டு பண்ணுவதாக இருப்பதால் அந்த ஆலைகளை அமைக்க சர்க்கார் உதவி செய்யக்கூடாது. இரண்டாவதாக, வெளிநாடுகளிலிருந்து இவற்றை இறக்குமதி செய்வதையும் தடை செய்ய அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN : ரெயான் இன்றைக்கு துணி ஆடை முதலியவைகளில் உபயோகிக்க மிகவும் வசதியாக இருக்கிறது. எல்லா நாடுகளும் ரேயான் உற்பத்தி செய்து தங்களுடைய தேவைகளைப் பெருக்கிக் கொள்ளுகிறார்கள். நம் ராஜ்யத்தில் மட்டும் நாம் ஏன் பிற்போக்காக இருக்க வேண்டும் ? அதன் இறக்குமதியைத் தடை செய்ய உத்தேசம் இல்லை.

SRI V. SANKARAN : ஸார், இந்த வெங்காயச் சருகு சேலை மாதர்களைப் பழைய அநாகரிக நிலைக்குக் கொண்டு சென்று, அப்போதிருந்த உடை நிலையை எடுத்துக் காட்டுகிறது. ஆதலால் அங்கங்களை மறைக்காத இந்த அங்கியை நம் ராஜ்யத்தில் செய்ய வேண்டாம் என்று சர்க்கார் கூறுமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : அங்கத்தினர் அவர்களுடைய அபிப்பிராயம் அப்படி இருந்தால் அவர்கள் உடுத்திக் கொள்ள வேண்டாம் (சிரிப்பு).

Gramasevaks

* 46 *Q*.—SRI K. SATTANATHA KARAYALAR : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) the number of Gramasevakas and Gramasevikas to be recruited in 1959; and